30.06.2023
அசல் வழக்கு எண்: 77/2014

பி.வா.சா.2 சாட்சி நாகராஜன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதிகள் தாக்கல் செய்த இந்த வழக்கிற்கு நான் கூறிய தகவலின் அடிப்படையில்தான் எனது வழக்கறிஞர் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து கரடிப்பட்டி உட்கடை ஆலம்பட்டி கிராம சர்வே எண். 18B/1B ல் கட்டுப்பட்ட 57 சென்ட் சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் அய்யர் மூப்பர் என்பருக்கு சொந்தமான சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அய்யர் மூப்பருக்கு முத்து, கருவாயன், புலியன், வீரணன், நாகு ஆகியோர்கள் வாரிசுகள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன முத்து என்பவருக்கு வீரணன், வேலு, ஆதவன், நாகமலை ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்சொன்ன வேலு என்பவருடைய வாரிசுகள்தான் வாதிகள் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆதவன் என்பவருக்கு நாகமலை, முத்துச்சாமி, வீராச்சாமி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நாகமலை, முத்துச்சாமி, வீராச்சாமி ஆகியோர்கள் இந்த வழக்கில் 9 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி வீரணன் என்பவருக்கு வீரணன் மற்றும் லோகநாதன் என்ற இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இந்த வழக்கின் 12 மற்றும் 13 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

தாவா சொத்து ஆதியில் மேற்படி நபர்களுக்கு பூர்வீக சொத்து என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்திற்கு ஆதியில் முத்து, கருவாயன், புலியன், வீரணன், நாகு ஆகியோர்கள் பெயரில் 408 என்ற பட்டா எண்ணில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் அதுபற்றி

எனக்குத் தெரியாது.

தாவாச் சொத்தை எனக்கு கிரையம் கொடுத்த நபர் வெள்ளைச்சாமி மூப்பர் மகன் பெத்தனன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த முத்தையாபிள்ளை என்பவர் கொடுத்த தாய்பத்திரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்தையாபிள்ளை யாரிடம் கிரையம் வாங்கினார் என்றால் வீரணன், ஆதவன், வேலு, நாகமலை ஆகியோர்களிடம் கிரையம் வாங்கினார். அந்த கிரையப்பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் முத்தையாபிள்ளை மேற்படி வீரணன், ஆதவன், வேலு, நாகமலை ஆகியோர்களிடம் கிரையம் வாங்கவில்லை என்றாலும், அவர் வெள்ளைச்சாமி மூப்பர் மகன் பெத்தனன் என்பவரிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து வேலு என்பவருடைய வாரிசுகளும், வீரணன் என்பவருடைய வாரிசுகளும் பிரிவினையில்லாமல் அனுபவித்து வந்த சொத்துக்கள் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி பி.வா.சா.ஆ.2 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).